# 6ஆம் வகுப்பு தமிழ்

## செய்யுள் : 1. இன்பத்தமிழ்

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஏற்றத் தாழ்வற்ற ________ அமைய வேண்டும்.
   **அ) சமூகம்** ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு
2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ________ ஆக இருக்கும்.
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் **ஈ) அசதி**
3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
   அ) நிலயென்று **ஆ) நிலவென்று** இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று
4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.
   அ) தமிழங்கள் **ஆ) தமிழெங்கள்** இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்
5. ‘அமுதென்று’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) அமுது+தென்று **ஆ) அமுது +என்று** இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று
6. ‘செம்பயிர்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   **அ) செம்மை+பயிர்** ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

**இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.**

1. விளைவுக்கு - பால்
2. அறிவுக்கு - வேல்
3. இளமைக்கு - நீர்
4. புலவர்க்கு - தோள்

1. நீர்
2. தோள்
3. பால்
4. வேல்

**ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

(எ.கா) பேர் - நேர்

| | | |
|---|---|---|
| பேர் - நேர் | பால் - வேல் | அமுதென்று – நிலவென்று |
| பேர் - நீர் | வான் - தேன் | உயிருக்கு – விளைவுக்கு, இளமைக்கு, புலவர்க்கு |
| பேர் - ஊர் | தோள் - வாள் | உயர்வுக்கு – அசதிக்கு |
| நீர் - ஊர் | | அறிவுக்கு – கவிதைக்கு |

**குறுவினா**

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**
   பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் அமுதம், நிலவு, மணம் ஆகியவையாகும்.

2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**
   ★ மலர், கரும்பு, கனி, பால், உயிர், அழகு ஆகியவற்றோடு தமிழை ஒப்பிடுகிறேன்.
   ★ கரும்பு - போன்று தமிழ் இனிமையானது அதனால் நான் தமிழை கரும்போடு ஒப்பிடுகிறேன்.

## சிறுவினா

**1. இன்பத் தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

**2. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

உலகில் உள்ள அனைத்து உயிருக்கும் நீர் முதன்மை ஆதாரமாகும். இவ்வுலகம் மூன்றில் ஒரு பங்கு நீரால் ஆனது. நீரினால் உற்பத்தியாகும் வேளாண் பயிர்கள் மனிதர்களின் பசியைப் போக்குகிறது. எனவே மக்களின் வளர்ச்சியே சமூக வளர்ச்சி ஆகும்.

## சிந்தனை வினா

**வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**

- தமிழில் உள்ள பாடல்கள் அனைத்தும் கூர்மையான, அறிவுசார்ந்த கருத்தைக் கூறி அறியாமை என்ற இருளை நீக்கி தெளிவடைய செய்கிறது.
- மழுங்கிய புத்தியைக் கூர்மையாக்கும் வகையில் பாடல் அமைவதால், அதை வேலுடன் ஒப்பிடுகின்றனர்.

## கற்பவை கற்றபின்

**1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.**

https://youtu.be/y3LQ06SMCM4

**2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

(தமிழை அமுது, நிலவு, மணம் என அழைப்பதற்கு சில காரணங்கள் உண்டு)

மாணவர் 1 : அமிழ்தம் என்பதன் கொஞ்சும் மொழியே அமுது. வானுலகில் வாழும் தேவர்கள் உண்ணும் உணவை அமிழ்தம் என்று கூறுவர். அதை உண்பதால் அவர்கள் சாகா வரம் பெற்று வாழ்வதாக ஒரு நம்பிக்கை. நம் வயிற்றுப் பசிக்கு உணவு எவ்வளவு முக்கியமோ அது போலவே அறிவுப்பசிக்கும் பண்பாட்டு கலாச்சாரத்திற்கும் தாய்மொழி தமிழ் முக்கியம். தமிழ் இனிமையானது என்றும், அது என்றும் இறவா நிலையில் உள்ளது என்றும் பொருள் கொண்டு அதை அமுது என அழைக்கிறோம்.

மாணவர் 2 : நிலவு என்றால் குளிர்ச்சி (தண்) என்று பொருள். நிலவானது இருளினைப் போக்கிப் வெளிச்சத்தை தருகிறது. அதுபோல, தமிழானது அறியாமை என்னும் இருளில் வாழும் மக்களிடம் அறிவு என்னும் (குளிர்ச்சியான) ஒளியைக் கொடுப்பதால் இதனை நிலவு எனக் கூறுகின்றனர்.

மாணவர் 3 : ஆமாம். ஆமாம். இதை போல் மணம் எனக் கூறுவதற்கும் சில காரணங்கள் உண்டு. மணமிகுந்த பல பொருள்களை தமிழுடன் ஒப்பிடுவர். எடுத்துக்காட்டாக மலரானது மலர்ந்து ஊர், நாடு, உலகம் என மணம் வீசுவதைப் போல தமிழானது எங்கும் பரவி எல்லா மக்களிடமும் புகழ் மிக்கதாய் திகழ்வதால் தமிழை மணம் எனக் கூறியுள்ளனர்.

**3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

- இயற்றமிழ்
- இசைத்தமிழ்
- நாடகத்தமிழ்
- செந்தமிழ்
- பைந்தமிழ்
- இனிமைத் தமிழ்
- அமுதத் தமிழ்
- தேன்த் தமிழ்
- இளமைத் தமிழ்

4. **தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.**

**(எ.கா.) தமிழே உயிரே வணக்கம்**
**தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்**
**அமிழ்தே நீ இல்லை என்றால்**
**அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்**
**தமிழே உன்னை நினைக்கும்**
**தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்**
**- காசி ஆனந்தன்**

## செய்யுள் : 2. தமிழ்க்கும்மி

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தாய் மொழியில் படித்தால் _________ அடையலாம்
   அ) பன்மை **ஆ) மேன்மை** இ) பொறுமை ஈ) சிறுமை
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் _________ சுருங்கிவிட்டது
   **அ) மேதினி** ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
3. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் **ஈ) செம்மை + தமிழ்**
4. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.
   **அ) பொய் + அகற்றும்** ஆ) பொய் + கற்றும்
   இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்
5. பாட்டு + இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   **அ) பாட்டிருக்கும்** ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும ஈ) பாடியிருக்கும்
6. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________.
   **அ) எட்டுத்திசை** ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

**நயம் உணர்ந்து எழுதுக.**

1. **பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.**

| முதல் எழுத்து ஒன்றி வருதல் (மோனை) | |
|---|---|
| **கொ**ட்டுங்கடி | **கோ**தையரே |
| **எ**ட்டுத் | **எ**ட்டிடவே |
| **ஊ**ழி | **ஊ**ற்றெனும் |
| **மெ**ய் | **மே**தினி |
| **ஆ**ழிப் | **அ**ழியாமலே |

2. **பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.**
   இரண்டாம் எழுத்து ஒன்றி வருதல் (எதுகை) :
   * கொட்டுங்கடி - எட்டு * ஊழி - ஆழி * பொய் - மெய்

3. **பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.**

இறுதி எழுத்து ஒன்றி வருதல் (இயைபு) :

- கொட்**டுங்கடி** - கொட்**டுங்கடி**
- கொண்ட**துவாம்** - நின்ற**துவாம்**
- பாட்டி**ருக்கும்** - காட்டி**ருக்கும்**

## குறுவினா

1. **தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**
   - பொய் என்னும் பண்பை நீக்கி, அறியாமையை அகற்றிவிடும்.
   - அன்புடைய பலருக்கு இன்பம் தரும்.
   - உயிர்போன்ற உண்மையை ஊட்டி அறத்தை கற்றுத்தரும்.
   - இந்த உலகில் சிறந்து வாழ வழிகாட்டும்.

2. **செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**

   செந்தமிழின் புகழ் எட்டுத்திசையிலும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

## சிறுவினா

1. **கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**
   - ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இலக்கண இலக்கியங்களைப் பெற்ற முதுமொழி நம் தாய்மொழி.
   - சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பல இலக்கியங்களைக் கண்டுள்ளது.
   - அவ்வாறு கண்டிருந்தும் தமிழ்மொழி சிதைந்து விடவில்லை. மாறாக பல மாற்றங்களைக் கண்டு வளர்ந்து உள்ளது.
   - பல மொழிகள் அழிந்த நிலையிலும் தமிழ்மொழி இன்றும், உலகில் தலைநிமிர்ந்து செம்மொழியாக நிற்பதனாலேயே கவிஞர் அவ்வாறு கூறுகிறார்.

2. **தமிழ்க் கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் எழுதுக.**
   - பலநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் தமிழ் எல்லா திசையிலும் பரவியுள்ளது.
   - அறிவு ஊற்றாகிய நூல்கள் பல உள்ளன.
   - அவை அறிவியல் வளர்ச்சிக்கு முன்னோடியாகவும் உள்ளது. இயற்கை சீற்றம், பேரிடர் கால மாற்றம் என எவற்றாலும் அழிக்கமுடியாத அளவிற்கு நிலைத்து நிற்கின்றன.
   - உலகில் சிறந்து வாழ பல அறக்கருத்துக்களைக் கூறி நல்வழிப்படுத்துவதில் தாய்மொழியாம் தமிழ் மொழியே சிறந்தது.

## சிந்தனை வினா

**தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?**

இன்பம் தரும் பல பாடல்கள் உள்ளன. உயிர் போன்ற உண்மையை ஊட்டி, உயர்ந்த அறக்கருத்தைத் தரக்கூடியது. இவ்வுலகில் சிறந்து வாழ்வதற்கான வழியை காட்டி மனதில் ஏற்படும் அறியாமையை போக்கக்கூடியது தமிழ் மொழி.

## கற்பவை கற்றபின்

1. **தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.**

(பாடப்பகுதியில் உள்ள பாடலை இனிய ஓசையுடன் சுயமாக தயாரித்துக் கொள்க)

2. **பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.**

வான்தோன்றி வளி தோன்றி நெருப்புத் தோன்றி
மண் தோன்றி மழை தோன்றி மலைகள் தோன்றி
ஊன் தோன்றி உயிர் தோன்றி உணர்வு தோன்றி
ஒளி தோன்றி ஒலி தோன்றி வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி
- வாணிதாசன்

# உரைநடை உலகம் : வளர்தமிழ்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் _________.
அ) புதுமை **ஆ) பழமை** இ) பெருமை ஈ) சீர்மை

2. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
அ) இடன் + புறம் ஆ) இடை + புறம் **இ) இடம் + புறம்** ஈ) இடப் + புறம்

3. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
அ) சீர் + இளமை **ஆ) சீர்மை + இளமை** இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________.
அ) சிலம்பதிகாரம் **ஆ) சிலப்பதிகாரம்** இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) கணினிதமிழ் **ஆ) கணினித்தமிழ்** இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் _________.
அ) கண்ணதாசன் **ஆ) பாரதியார்** இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

7. 'மா' என்னும் சொல்லின் பொருள் _________.
அ) மாடம் ஆ) வானம் **இ) விலங்கு** ஈ) அம்மா

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்தை வெளிப்படுத்தவும் உதவுவது ***மொழி***.
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ***தொல்காப்பியம்***.
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ***எண்களின்*** அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

## சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தனிச்சிறப்பு : **உலக மொழிகளுள் தமிழ் மொழி <u>தனிச்சிறப்பு</u> வாய்ந்தது.**
2. நாள்தோறும் : **நாம் <u>நாள்தோறும்</u> செய்தித்தாள் படிப்பது நன்று.**

## குறுவினா

**1. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**

**தமிழ் மொழி : மூத்தமொழி**

- இலக்கியங்கள் தோன்றிய பிறகுதான் அவற்றிற்கு இலக்கணம் தோன்றியிருக்க வேண்டும். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்.
- இப்பழமையான நூல் தோன்றுவதற்கு முன்பே தமிழில் பல இலக்கியங்கள் தோன்றியிருக்க கூடும். இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ் மொழி மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது.

**2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

- சிலப்பதிகாரம்
- சீவக சிந்தாமணி
- யசோதர காவியம்
- மணிமேகலை
- குண்டலகேசி
- உதயகுமார காவியம்
- வளையாபதி
- நீலகேசி
- நாககுமார காவியம்

## சிறுவினா

**1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?**

- திணை இருவகைப்படும். அவை உயர்திணை, அஃறிணை.
- உயர்திணைக்கு எதிர்ச்சொல் தாழ்திணை அதனை அவ்வாறு கூறாமல் அஃறிணை என்று பெயர் இட்டனர். அதாவது அஃறிணைப் பொருள்களான மரம், செடி, கொடி, மாடு, ஆடு, மண், குளம் போன்றவற்றைக் குறிப்பதாகும்.
- பாகற்காய் கசப்பு சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல் இனிப்பு அல்லாத காய் (பாகற்காய் - பாகு + அல் + காய்) என கூறினர்.

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

- தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
- பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்,
  *யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
  *இனிதாவது எங்கும் காணோம்* - என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

**3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

- உலகிலுள்ள ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகளில், தமிழ் மொழி போன்ற சில மொழிகள் மட்டுமே பேச்சு வடிவம், எழுத்து வடிவம் ஆகிய இரண்டையும் பெற்றுள்ளன.
- உலக மொழிகளுள் பலவற்றுள் இலக்கண, இலக்கிய வளம் பெற்றுத் திகழும் மொழி மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்ட சில மொழிகளில் சிறப்பு மிக்க தமிழ் மொழி செம்மொழியாகும்.
- தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
- மிகவும் தொன்மையான மொழியாக விளங்கும் தமிழ்மொழி பேசவும், படிக்கவும், எழுதவும் உகந்த மொழி.
- தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல்தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும், இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும், நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டும்.

## சிந்தனை வினா

**1. தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

* உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துக்கள்.
* உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால், உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் எளிது. எ.கா : அ + மு + து = அமுது
* தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துக்களாகவே அமைந்துள்ளன. எ.கா : அ, எ, ஔ, ண, ஞ

**2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

* தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
* துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றவை தமிழ்க்கவிதை வடிவங்கள். கட்டுரை, புதினம், சிறுகதை போன்றவை உரைநடை வடிவங்கள்.
* தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

## கற்பவை கற்றபின்

**1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**

மாணவர் 1 : “கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி” என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அப்படிப்பட்ட தொன்மைத் தன்மை வாய்ந்த மூத்த மொழியாக தமிழ் மொழி உள்ளது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த வரலாறுகளும், இன்று நமக்கு கிடைக்கும் சங்க நூல்களை வைத்து பார்க்கும் போது தமிழ் மொழி தொன்மையானது என்பது மறுக்க இயலாத உண்மை.

மாணவர் 2 : ஆமாம் உண்மைதான். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை நின்றவை காப்பியங்களும், இலக்கியங்களும், அவற்றை உருவாக்கிய புலவர்களுமே ஆவார். ஜீ.யு.போப், ஷேக்ஸ்ப்பியர், ஷெல்லி என பல அயல்நாட்டு அறிஞர்களும் தமிழ் மொழியின் பெருமை அறிந்து, தமிழ் மொழியில் உள்ள சில நூல்களை மொழிபெயர்த்து அதன் மூலம் தமிழை வளர்த்தனர்.

மாணவர் 1 : அதுமட்டுமின்றி சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழை கட்டாய மொழியாகவும் மாற்றி உள்ளனர். திருவள்ளுவர் தமிழில் எழுதிய திருக்குறளை பல மொழிகளில், பல நாடுகளில் மொழிப் பெயர்த்து அதன் பயனை உணர்கின்றனர்.

மாணவர் 2 : 2004 ஆம் ஆண்டு ஜீன் 6-ம் தேதி தமிழ் மொழியை செம்மொழி என இந்திய அரசு அறிவித்தது. அதன் வளர்ச்சிக்காகவும், ஆய்வுக்காகவும், மைசூரில் செம்மொழி தமிழாய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் தற்போது வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.

மாணவர் 1 : தற்போது அரசுப் பணி தேர்வுகளிலும் தமிழ் மொழிக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு காலத்திற்கு ஏற்ப தன்னை புதுப்பித்துக் கொள்ளுவதால் தான் தமிழ் மொழி இன்றும் இறவா நிலையில் உள்ளது.

**2. தமிழ் பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

1. வணக்கம்
2. வாருங்கள்
3. அமருங்கள்
4. உங்கள் பெயர் என்ன?
5. மன்னித்துவிடுங்கள்
6. நலமாய் இருக்கிறீர்களா?
7. உணவு உண்டீர்களா?
8. சாப்பிடுங்கள்
9. நன்றி
10. சென்று வாருங்கள்

**3. வாழ்த்துகளைத் தமிழில் கூறுவோம்**

(எ.கா.)

**பிறந்தநாள் வாழ்த்து**

நீண்ட நீண்ட காலம் - நீ, நீடு வாழ வேண்டும்!
வானம் தீண்டும் தூரம் - நீ, வளர்ந்து வாழ வேண்டும்!
அன்பு வேண்டும்! அறிவு வேண்டும்! பண்பு வேண்டும்! பரிவு வேண்டும்!
எட்டுத்திக்கும் புகழ வேண்டும்! எடுத்துக்காட்டு ஆக வேண்டும்!
உலகம் பார்க்க உனது பெயரை, நிலவுத் தாளில் எழுதவேண்டும்!
சர்க்கரைத் தமிழ் அள்ளி, தாலாட்டு நாள் சொல்லி வாழ்த்துகிறோம்!
பிறந்தநாள் வாழ்த்துகள்! பிறந்தநாள் வாழ்த்துகள்!
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

- அறிவுமதி

**விருது வென்றவருக்கான வாழ்த்து**

**நீண்ட நீண்ட காலம் - நீங்கள் நீண்டு வாழ வேண்டும்!**
**நிலவை போல நீங்கள் தினமும் மகிழ்ந்து வாழ வேண்டும்!**
**அன்பு உண்டு, அறிவு உண்டு, பண்பு உண்டு, பரிவு உண்டு**
**எட்டுத்திக்கும் புகழ வேண்டும்! எடுத்துக்காட்டு ஆக வேண்டும்!**
**உலகம் போற்றும் உமது பெயரை நிலவு தாளில் எழுதவேண்டும்!**

## விரிவானம் : கனவு பலித்தது (கடிதம்)

### மதிப்பீடு

**அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

**இன்சுவை:**

சதீஷ்தவான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் இளம் ஆராய்ச்சியாளர் பணிக்காக இன்சுவை தேர்ந்தெடுக்கப்பட்டாள். தான் ஆறாம் வகுப்பு படிக்கும் போதே அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்று விரும்பிய இன்சுவை தமிழ் வழியில் படித்ததனால் தனது இலக்கை அடைவது கடினம் என எண்ணி தனது ஐயத்தை தன் அத்தையிடம் கூறுகிறாள். அதன் பிறகு தனது அத்தையின் ஊக்குவிப்பினாலும், உதவியாலும் தன் இலக்கை அடைகிறாள்.

**அத்தையின் பதில் கடிதம்:**

சாதனை புரிவதற்கு மொழி ஒரு தடையே இல்லை. கணித மேதை இராமானுஜம், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுறை, இஸ்ரோவின் தலைவர் சிவன், இஸ்ரோவின் இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் வளர்மதி போன்றோர் தாய்மொழி தமிழில் கல்வி பயின்று சாதனை பெற்றவர்களே ஆவர்.

**தமிழர்களின் அறிவியல் சிந்தனை:**

உலகில் பஞ்ச பூதங்களும் கலந்ததுதான் உலகம் என்பது அறிவியல் உண்மை. தொல்காப்பியர் இதனை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' என்றும் மற்றும் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்களை வகைப்படுத்தி தனது தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கியங்கள் கூறும் சான்றுகள்:**

முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார்நாற்பது, திருப்பாவை போன்ற நூலில் கடல் நீர் ஆவியாகி மேகமாகி, பின் மேகம் குளிர்ந்து மழையாக பொழியும் என்ற அறிவியல் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி"

என்ற பாடலில் திரவப்பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும், அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்று ஔவையார் அப்போதே கூறியுள்ளார்.

"நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு"

போரில் புண்பட்ட வீரரின் மார்பை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தியை பதிற்றுப்பத்து கூறுகிறது.

"கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய
நரம்பின் முடிமுதிர் பரதவர்"

சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தியை நற்றிணை குறிப்பிடுகிறது.

திருவள்ளுவ மாலையில் கபிலர்

"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்"

ஒளியைக் கோட்டம் அடையச் செய்து தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்று பிற்காலத்தில் கலீலியோ கூறியதை, புல்லின் நுனியில் நிற்கும் பனித்துளியில் நெடுந்தொலைவில் நிற்கும் பனைமரம் முழுமையாக தெரியும் காட்சியை கபிலர் அன்றே கூறியுள்ளார்.

இதன் மூலம் நம் தமிழர்கள் இன்றைய அறிவியல் துறைக்கு முன்னோடியாக இருந்துள்ளது நமக்கு பெருமையாகும். தமிழர்கள் அறிவியல் துறையில் மட்டுமின்றி பல்வேறு துறைகளிலும் வளர்ந்து வருகின்றனர் என்று தமிழின் பெருமையை கடித வாயிலாக கூறுகிறாள்.

## கற்பவை கற்றபின்

1. **இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.**
   நான் விரும்பும் தலைப்பு : **"உழைப்பே உயர்வு தரும்"**

2. **உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.**

இடம் : திருச்சி
நாள் : 19.08.2022

அன்புள்ள தோழிக்கு,

வணக்கம்! இங்கு அனைவரும் நலம், உன் நலம் காண ஆவலாக இருக்கிறேன். எனது வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் உன்னுடன் நான் பகிர்ந்து இருக்கிறேன். அதுபோலவே என்னுடைய எதிர்கால கனவையும் உன்னிடம் கூற விரும்புகிறேன். நான் என் எதிர்காலத்தில் வழக்கறிஞராக விரும்புகிறேன். ஏனென்றால் இன்றைய சூழ்நிலையில் நாட்டில் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கின்றன. குற்றவாளிகளைவிட நிரபராதிகள் அதிகமாக தண்டிக்கப்படுகின்றனர். தண்டனைகள் குறைவாக இருப்பதால் நாட்டில் குற்றம் நாலுக்கு நாள் பெருகிகொண்டே இருக்கிறது. தவறுகளை குறைக்க தண்டனைகளை அதிகப்படுத்த வேண்டும்.

குறிப்பாக வரதட்சனை கொடுமைகள், பாலியல் கொடுமைகள் என பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து கொடுமைகளையும் எதிர்த்து போராடவேண்டும். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை அனைவரும் படிக்கும் படி அறிவுரை கூறவேண்டும். அண்ணல் அம்பேத்கரைப் போல சட்டங்கள் இயற்றவும், நீதிக்காக போராடும் ஒரு உண்மை மனிதனாக வாழ ஆசைப்படுகின்றேன்.

இப்படிக்கு
அன்புடன்,
நிலா.

3. **இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**
   - இன்சுவை, தான் எடுத்த செயலில் வெற்றிபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள். அவளுடைய அத்தை கூறிய அறிவுரைகளைக் சிரமேற்கொண்டு பின்பற்றினாள்.
   - இன்சுவை முயற்சியில் தளர்ந்து இருந்தபோது அவளுடைய அத்தையின் உற்சாகமான வார்த்தையும் ஆறுதலும் அவளுக்கு உத்வேகத்தைத் தந்தது. அதனால், நூலகம் சென்று பல நூல்களைக் கற்று அவளது கனவை நினைவாக்கினாள்.
   - விடாமுயற்சியும், உழைப்பும் மனிதனை உயர்த்தும் என்பதற்கு இன்சுவை சான்றாகத் திகழ்ந்தாள்.

4. **'கனவு பலித்தது' என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை விளக்குக.**
   - எண்ணங்கள் நேரானால் செயல்களும் நேராகும். வெற்றியும் நம் கைவசமாகும். இக்கதையில் இன்சுவை சிறு வயது முதலே தான் ஓர் அறிவியல் ஆய்வாளர் ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறாள்.
   - ஆனால், அவளுடைய முயற்சிகளுக்கு பல முட்டுக்கட்டைகள் விழுகின்றன. அதனால் சோர்ந்து போகாமல் தன் அத்தைக்குக் கடிதம் எழுதுகிறாள்.
   - தனது அத்தையின் கனிவான பேச்சும் உற்சாகமான வார்த்தைகளும் இன்சுவைக்கு உத்வேகத்தை அளித்தது.
   - அத்தையின் உற்சாகத்தினால் தான் தொடர்ந்து கனவை நனவாக்க பல வழிகளில் முயல்கின்றாள்.
   - இறுதியாக தான் ஓர் அறிவியல் ஆய்வாளர் ஆக வேண்டும் என்று எண்ணிய கனவு பலித்தது. ஆகவே "கனவு பலித்தது" என்ற தலைப்பு இக்கடிதத்திற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

# கற்கண்டு : தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

## மதிப்பீடு

**கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.**

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் ***அது***.
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல் ***பூ***.
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ***அ∴து***.

**குறுவினா**

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை

- ✱ எழுத்து இலக்கணம்
- ✱ சொல் இலக்கணம்
- ✱ பொருள் இலக்கணம்
- ✱ யாப்பு இலக்கணம்
- ✱ அணி இலக்கணம்

**2. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**

மெய்யெழுத்துகளின் மூவகை இனங்கள் :

1) வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
2) மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
3) இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

**3. தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

| தமிழ் எழுத்துக்கள் | மாத்திரை அளவுகள் |
|---|---|
| குறில் எழுத்துக்கள் | - 1 மாத்திரை |
| நெடில் எழுத்துக்கள் | - 2 மாத்திரை |
| மெய் எழுத்துக்கள் | - அரை மாத்திரை |
| ஆய்த எழுத்து | - அரை மாத்திரை |

## கற்பவை கற்றபின்

**உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.**

(எ.கா.) கபிலர் - $1 + 1 + 1 + \frac{1}{2} = 3\frac{1}{2}$

| பெயர்கள் | மாத்திரை அளவுகள் |
|---|---|
| செல்வம் | $1 + \frac{1}{2} + 1 + \frac{1}{2} = 3$ |
| அகிலன் | $1 + 1 + 1 + \frac{1}{2} = 3\frac{1}{2}$ |
| செல்வி | $1 + \frac{1}{2} + 1 = 2\frac{1}{2}$ |
| தாமரை | $2 + 1 + 1 = 4$ |

# மொழியை ஆள்வோம்!

## கேட்டும் பார்த்தும் உணர்க.

1. **இனிய தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

*மனதில் உறுதி வேண்டும்.*
*வாக்கினிலே இனிமை வேண்டும்;*
*நினைவு நல்லது வேண்டும்.*
*நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;*
*கனவு மெய்ப்பட வேண்டும்.*
*கைவசமாவது விரைவில் வேண்டும்.*
*தனமும் இன்பமும் வேண்டும்.*
*தரணியிலே பெருமை வேண்டும்.*
*கண் திறந்திட வேண்டும்.*
*பெண் விடுதலை வேண்டும்.*
*காரியத்தில் உறுதி வேண்டும்.*
*பெரிய கடவுள் காக்க வேண்டும்.*
*மண் பயனுற வேண்டும்.*
*வானகமிங்கு தென்பட வேண்டும்;*
*உண்மை நின்றிட வேண்டும்.*

2. **தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.**

வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் தமிழ் அறிஞர்கள் ஆற்றிய உரைகளைக் கேட்டு மகிழ்தல். இச்செயல்பாட்டினை மாணவர்களே சுயமாக கேட்டு பார்க்க வேண்டும்.

## கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.

- **தமிழ் இனிது**
- **தமிழ் எளிது**
- **தமிழ் புதிது**

1. **தமிழ் இனிது :**

அனைவருக்கும் வணக்கம்! நம் தாய்மொழியாம் தமிழின் இனிமை, எளிமை, புதுமை பற்றிப் பார்ப்போமா! நம் தாய்மொழியாம் தமிழை உயர்தனிச் செம்மொழி என்று பெயரிட்டபோதே அதன் சிறப்புகளை அனைவரும் அறிவர். இது தனித்து இயங்கும் மொழி, செம்மையான மொழி எனச் சிறப்பிக்கலாம்.

தமிழ் என்றால் அழகு, தமிழ் என்றால் இனிமை. அதனால்தான் இதனைத் தேன்தமிழ், தீந்தமிழ் முதலான சொற்களால் அழைக்கின்றனர். தமிழ் என்ற சொல்லைத் தம்-இழ் எனப் பிரித்தோமேயானால் தம்மிடத்தில் ‘ழ்’ கொண்ட மொழி எனப் பொருள் கொள்ளலாம். தமிழில் மூன்று இனங்கள் உண்டு. அவை முறையே வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகும்.

“தேனொக்கும் தமிழே! நீ கனி, நான்கிளி
வேறென்ன வேண்டும் இனி?”
“செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!”

இப்பாடல் வரிகள் தமிழின் இனிமையைப் பறைசாற்றும்

**2. தமிழ் எளிது :**

தமிழ் இனிய தமிழ் என்பதோடு எளிய தமிழ் எனவும் கூறப்படுகிறது. தமிழ் மொழியானது பேசவும் படிக்கவும் மிகவும் எளிதானது. இந்தச் சிறப்பு உலகில் எந்த மொழிக்கும் இல்லாதது. தமிழ் மொழியானது எழுதுவதற்கும் படிப்பதற்கும் எளிமையான மொழி. உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் போதும்.

எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழும். தமிழ்மொழியை எழுதும் முறையும் எளிதானது. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. தமிழ் எழுத்துகள் மேல் உதடு, கீழ் உதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனிநாக்கு, அடிநாக்கு, நடுநாக்கு இவற்றின் முயற்சியால் மட்டுமே ஒலிப்பதாக இருக்கும். தமிழ் மிகவும் மென்மையாக ஒலிக்கக்கூடிய மெல்லோசை மொழியாகவே உள்ளதால் எழுதவும் பேசவும் படிக்கவும் எளிமையானதாக உள்ளது.

**3. தமிழ் புதிது :**

தமிழ் மொழி என்றென்றும் புதிதாக உள்ளது. அதற்குக் காரணம் இன்று வளர்ந்து வரும் அறிவியல், கணினி ஆகிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய கலைச் சொற்கள் உருவாகிக் கொண்டே உள்ளன. அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று சொல்லும் அளவிற்கு அவற்றின் கலைச்சொற்கள் பெருகியுள்ளன. சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாகவும் தமிழ்மொழி விளங்குகிறது. இதிலிருந்து தமிழ் இனிது, எளிது, புதிது என்பதை அறியலாம்.

## சொல்லக் கேட்டு எழுதுக.

* இன்பத்தமிழ்
* தொல்காப்பியம்
* சுப்புரத்தினம்
* பன்னிரண்டு
* பாவேந்தர்
* அஃறிணை
* செந்தமிழ்
* ஆராய்ச்சியாளர்
* உயிரினங்கள்
* கருவூலங்கள்

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு ________ சொல்வது

   அ) விரிவாகச் ***ஆ) சுருங்கச்*** இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது ***சுத்தம்.***
3. உடல்நலமே ***உழைப்புக்கு*** அடிப்படை
4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?

   உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன : ***உணவு, உடை, உறைவிடம்***

5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக. ***சுத்தம்***

## பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.

1. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.

   ***எங்கள் பள்ளியில்*** சுற்றுலா கூட்டிட்டுப் ***போகிறார்கள்.***

2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

   பெற்றோரிடம் ***அனுமதி கடிதம்*** வாங்கி வரச் ***சொன்னார்கள்.***

## ஆய்ந்தறிக.

பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.

S.இனியன், எஸ்.இனியன், ச.இனியன் - இவற்றுள் சரியானது எது? ஏன்?

***ச.இனியன்***

***காரணம் :*** பெயரும், பெயரின் தலைப்பெழுத்தையும் தமிழில்தான் எழுதவேண்டும். பெயரை தமிழிலும், பெயரின் தலைப்பெழுத்தை பிற மொழியில் எழுதுவது தவறு.

## கடிதம் எழுதுக.

**விடுப்பு விண்ணப்பம்**

அனுப்புநர்

அ. தமிழ்ச்செல்வி
ஆறாம் வகுப்பு,
வளனார் உயர்நிலைப் பள்ளி,
அண்ணாநகர்,
திருச்சி-02.

பெறுநர்

வகுப்பாசிரியர் அவர்கள்
ஆறாம் வகுப்பு ஆ பிரிவு,
வளனார் உயர்நிலைப் பள்ளி,
அண்ணாநகர்,
திருச்சி-02.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : விடுப்பு வேண்டி விண்ணப்பம்

வணக்கம். எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதன் காரணமாக பள்ளிக்கு வர இயலவில்லை. எனவே, எனக்கு இன்று ஒரு நாள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இடம் : திருச்சி
நாள் : 05.09.2021

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள மாணவி,
**அ. தமிழ்ச்செல்வி.**

பெற்றோர் கையொப்பம்
**இளங்கோவன்.**

# மொழியோடு விளையாடு

## திரட்டுக.

**‘மை’ என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

| | | | |
|---|---|---|---|
| 1. இளமை | 6. உண்மை | 11. அண்மை | 16. செழுமை |
| 2. புதுமை | 7. ஒருமை | 12. வளமை | 17. தொன்மை |
| 3. மடமை | 8. செம்மை | 13. எருமை | 18. வறுமை |
| 4. கருமை | 9. வாய்மை | 14. கடமை | 19. தனிமை |
| 5. மென்மை | 10. பழமை | 15. பன்மை | 20. இயலாமை |

## சொல் வளம் பெறுவோம்.

**1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

**(எ.கா)**

கரும்பு - கரு, கம்பு

கவிதை - ***தை, கவி, கதை, விதை***

பதிற்றுப்பத்து - ***பதி, பத்து, பற்று***

பரிபாடல் - ***பா, பரி, பாடல், பால், பாரி***

**2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் | மொழி | கோல் | மீன் | நீதி | எழுது |
| கண் | வெளி | தமிழ் | மணி | மாலை | விண் |

**(எ.கா) விண்மீன்**

| | |
|---|---|
| 1. தமிழ்மொழி | 7. தமிழ்மணி |
| 2. தமிழ்நூல் | 8. எழுதுகோல் |
| 3. மணிமாலை | 9. நீதிநூல் |
| 4. விண்வெளி | 10. மொழிநூல் |
| 5. கண்மணி | 11. மீன்கண் |
| 6. தமிழ்மாலை | |

## பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.

அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, அன்பு

**(எ.கா.)**

அ - அன்பு தருவது தமிழ்

ஆ - ***ஆற்றல்*** தருவது தமிழ்

இ - ***இன்பம்*** தருவது தமிழ்

ஈ - ***ஈடு*** இல்லாதது தமிழ்

உ - ***உவகை*** தருவது தமிழ்

ஊ - ***ஊக்கம்*** தருவது தமிழ்

எ - ***என்றும்*** வேண்டும் தமிழ்

ஏ - ***ஏற்றம்*** தருவது தமிழ்

**கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | சு |
| ர | ம் | தா | ர | சு | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | பா | ரை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

✱ பாரதிதாசன் ✱ பாரதியார் ✱ திருவள்ளுவர்

✱ வாணிதாசன் ✱ ஔவையார் ✱ சுரதா

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்...**

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்.
2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.
3. தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| வலஞ்சுழி | - Clock wise | இணையம் | - Internet |
| தேடுபொறி | - Search engine | முகநூல் | - Facebook |
| புலனம் | - Whatsapp | இடஞ்சுழி | - Anti Clock wise |
| குரல்தேடல் | - Voice search | தொடுதிரை | - Touch Screen |
| செயலி | - App | மின்னஞ்சல் | - E-mail |

**இணையத்தில் காண்க.**

**உனக்குப் பிடித்த தமிழ்க் கவிஞர் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி அறிக.**

*******